# “இணைந்து நம்பிக்கையின் வழிகளை திறப்போம்”

பெனின், கோட்டுனுவில் செப்டம்பர் 2016-ன் துவக்கத்தில் 7500 இளம் ஆப்பிரிக்கர்களை கூட்ட இயன்றது நமது இயக்கத்திற்கு ஓர் சிறப்பாகும்.[1] ஒன்றிணைந்து, தனிமையாக அல்ல ஒருவரை ஒருவர் கைதாங்கி, நம்மிலும், நம்மை சுற்றிலும், மனித குலத்திலும் - நம்பிக்கையின் பாதைகளை திறக்க முடியும் என்ற இந்த கருத்தோட்டம் 2017-லும் நமக்கு உத்வேகம் தரும் என்பதில் ஐமில்லை.

நம்முடைய நம்பிக்கையினை வளர்க்க, மாற்றங்கள் வெளியிலிருந்து வரட்டும் என எதிர்பார்த்து வாழாவிருத்தல் எப்படி? என்ற கேள்வி கோட்டனுவில் கேட்கப்பட்ட கேள்விகளில் முக்கியமானதாகும். எவ்விதமான அற்பணம் ஒவ்வொருவரும் இதற்கென செய்ய வேண்டும் என்பதும் ஓர் கேள்வியாகும்.

பெரும்பான்மையான ஆப்பிரிக்கர்களின், அரசியல், பொருளாதார சூழலில் நீதி எவ்வளவு அவசியமானது என்பதை மற்ற கண்டங்களின் மக்கள் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். இது ஆப்பிரிக்கர்கள் தங்களுக்கு ஓர் எதிர்காலத்தை தங்கள் நாடுகளில் உருவாக்கம் செய்ய உதவியாய் இருக்கும்.

தங்கள் எதிர்காலத்தை சரிபடுத்த ஆப்பிரிக்கா இளைஞர்கள் பலரும் தங்கள் ஆக்கப்பூர்வமான திறமையினை பயன்படுத்த விரும்புகின்றனர். இவர்களின் இச்செயல்கள் உலகின் பல பாகங்களில் இதைப் போன்ற சூழல்களில் வாழும் இளைஞர்களும் விழிப்படையவும், தைரியமடையவும் உதவும். இதனை தேசே(Taizé)யிலும் மற்ற இடங்களிலும் தொடரத்தக்கப்படி கோன்டனு-ல் உருவான இச்சிந்தனை உதவும். கீழே கூறப்படும் நான்கு பிரேரணைகள் (Proposals) நமது நம்பிக்கையின் பாதை திறப்பதற்கு வழி நடத்தும். மிக தெளிவான முறையில் இந்த பிரேரணைகளை செயல்படுத்த நாமும் எளிய வழிமுறைகளை காண முற்படுவோம். மகிழ்வுடனும், கருணையுடனும் ஒன்றிணைதல் என்பது சகோதரர் ரோஜர், தேசே(Taizé) சமூகத்தின் உள்ளத்தில் ஏற்படுத்த விரும்பிய மூன்று உண்மைகளில் ஒன்றாகும்.

---

1 ஜோகன்ஸ்பர்க் - 1995, நைரோபி 2008, கிகாலி 2012, இவற்றிற்கு பிறகு ஆப்பிரிக்கரின் நம்பிக்கையின் பயணத்தின் 4-ாம் கட்டம் கோட்டனுவில் ஆகஸ்ட் 21 - செப்டம்பர் 4 வரை நடத்தப்பட்டது. கத்தோலிக்க, மெதடிஸ்ட சபையின் 7500 பேரில் டோகோ - 800, நைஜிரியா 550, கானா 10, புர்கினாபாசோ 160, ஐவரிகேஸ்ட் 50 என பங்கு பெற்றதோடு மொத்தமாக 20 ஆப்பிரிக்க நாடுகளும், ஐரோப்பாவிலிருந்து 15 நாடுகளின் 60 பிரதிநிதிகளும் பங்குப்பெற்றனர். பிரஞ்சு, இங்கிலீஸ், பான் மொழி கருத்துகளும் தொழுகையில் எருபா மற்றும் பினா பாடலாகும் இடம் பெற்றன.

**முதல் பிரேரணை:**

## **“நம்பிக்கையில் நிலைத்திரு அது தான் ஆக்கப்பூர்வமானது”**

*நம்பிக்கை இல்லாத சூழலிலும் - ஆப்ரகாம் தான் அனேக இனங்களுக்கு தகப்பனாவதை நம்பினார்.* ***ரோமர் 4:18***

*இந்த நம்பிக்கை ஆத்தும நங்கூரமாய் இருக்கிறது. அது நிலையும் உறுதியுமானது.* ***எபிரேயர் 6:19***

*சிறுபிள்ளையை போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் எவனும் அதில் பிரவேசிக்க மாட்டான்.* ***லூக்கா 18:17***

உலகின் நிலையற்ற செயல்பாடுகளின் சூழ்நிலையில் இன்று நாம் வன்கொடுமைகள், துயரங்கள், அநீதிகளால் குழம்பிபோய்யுள்ளோம். படைப்புகள் அனைத்தும் வேதனைப் படுகின்றன. இது பிரசவ வேதனையை ஒத்த வேதனையாகும். பரிசுத்த ஆவியானவரும் வேதனைப்படுகிறார். ஆனால் பரிசுத்த ஆவியானவர்தான் நம் நம்பிக்கையின் ஆதரவாளனாயுமிருக்கிறார். ரோமர் 8:22, 26 காண்க. ஆகவே நாம் என்ன செய்யலாம்.

விசுவாசம் என்பது கடவுளில் கொள்ளும் எளிய பற்றாகும். இது நமக்கு எப்பொழுதும், எல்லாவற்றிற்கும் முன் ஆயத்தம் செய்யப்பட்ட பதில்களை தருவதில்லை. ஆனால் நாம் சோர்வினாலும், பயத்தினாலும் முடங்கி போகாமல் காத்துக் கொள்கிறது. நாம் தொடர்ந்து செயல்பட நம்மை நடத்துகிறது. இதனால் நமது நம்பிக்கைகளுக்கு மேலாக நற்செய்தியாகிய சுவிஷேசம் ஒரு மாபெரும் நம்பிக்கையின் சூழலை நாம் உணர உதவுகிறது.

நம்பிக்கை என்பது ஒரு மேலோட்டமான கண்ணோட்டமாக நமது வாழ்வின் உண்மை நிலைகளை மறைக்கிற ஒன்றல்ல. ஆனால் கடவுளில் வைக்கப்பட்ட ஒரு நங்கூரமாகும். அது ஆக்கப்பூர்வமானது. உலகின் நம்பிக்கையற்ற இடங்களில் இதன் அடையாளங்களை நாம் காண முடியும்.

- நம்முடைய உள்ளங்களிலும், உலகிலும் நாம் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை காண முடியும். நாம் கண்களால் அதனை காண இயலாவிடினும், அவரது பிரசன்னத்தை சார்ந்து அதனை உணர முடியும்.
- எனவே நமது விசுவாசம் குழந்தைகளின் பற்றினை போல எளியதாக அமையட்டும். இதனால் நம் விசுவாசத்தின் ஆழத்தை குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல. ஆனால் மனிதகுலம், மற்றும் அனைத்து படைப்பிற்கான கடவுளின் அன்பின் மையத்தை உறுதியாய் பற்றிக் கொள்ளவேண்டும் என்பதே. இதனை குறித்து ஆரம்ப நிலைகளிலிருந்தே மனிதரின் நம்பிக்கை துரோகங்கள் மற்றும் அவிசுவாசமான செயல்பாடுகள் இவற்றின் மத்தியிலும் கடவுளின் அன்பு மாறாமல் உள்ளது என உணர்வது நமது நம்பிக்கையினை உயிரோட்டம் உடையதாய் காப்பதாக.

- இந்த செய்தியினால் நிரப்பட்டவர்களாக, நாமும் நமக்கு நெருக்மானவர்களும் காணப்பட நாம் அடிக்கடி ஜெபத்திற்காக ஒன்று கூடி வருபவர்களாய் இருத்தல் அவசியமாகும். ஜெபத்தின் அழகு என்னவென்றால் அது கடவுளின் ரகசியங்களை பிரதிபலிப்பதாக அமைவதே ஆகும். மேலும் ஜெபம் கடவுளோடு தனிப்பட்ட உறவு, ஈடுபாடு கொள்ள நம்மை வழிநடத்துகிறது.

**இரண்டாம் பிரேரணை:**

**"பகிர்ந்தளிக்க தக்கபடி நம் வாழ்வினை எளிமையானதாக்குவின்"**

*நான் சாந்தமும் மனதாழ்மையுமாய் இருக்கிறேன் என்றார் இயேசு.* ***மத் 11:29***

*இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் கொடுங்கள்.* ***மத் 10:7***

*ஐஸ்வரியமுள்ள இளைஞனுக்கு போய் உனக்கு உள்ளதை விற்று தரித்திருக்க கொடு . . . பின்பு என்னை பின்பற்றி வா என்றார் இயேசு.* ***மத் 19:21***

தனக்கு என சேர்க்கும் மனநிலை, பணம் மற்றும் வாழ்வில் வெற்றி பெறவேண்டும் என்ற பந்தய ஓட்டம், அநீதிக்கும், ஏமாற்றங்களுக்கும் நடத்துகிறது. நற்செய்தியில் கூறப்படும் பகிர்ந்தளிக்கும் ஆவி என்பது நம்பிக்கையின் பாதையில் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஓர் பண்பாகும்.

எளியமையான வாழ்வு விடுதலை மற்றும் மகிழ்ச்சிக்கு ஓர் ஊற்றாகும். அப்பொழுது வாழ்வு சுமையற்றதாகிறது.

எளிமை நம் உள்ளத்தை வெளிச்சமிட்டு காட்டுகிறது. அது தந்திரமற்றது. மற்றவர்களை எளிதில் நம்புகிறது. இது ஏமாற்றும் மனநிலை மற்றும் போலித்தனத்திற்கு எதிரானது. நாம் சந்திக்கும் ஒவ்வொருவரோடும் எந்தவித பயமுமின்றி உரையாட, உறவாட நமக்கு உதவுகிறது. இயேசுவின் வாழ்வு இதற்கு ஓர் முன்மாதியாக உள்ளது.

- உலக பிரகாரமான பொருட்களை பற்றிய விஷயத்தில் நாம் ஓர் எளிய வாழ்வு வாழ தொடர்ச்சியாக முயலவேண்டும். இது மனித வாழ்வின் பாடுகள், மக்களை ஒடுக்கும் வறுமை, குடியற்று அலைவோரின் பிரச்சனைகள், மற்றும் உலகில் காணப்படும் பலவிதமான முரண்பாடுகளினிடையே, பகிர்ந்தளிக்கும் பண்பிற்கு நம்மை ஊக்கப்படுத்துகிறது.

- மேலும் நம்முடைய சுற்றுப்புறங்களில் நம் பணி, கல்வி, மற்றும் சமூக சுற்றுசூழல்களில் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் அடையாளங்களை நாம் காண ஒருவரையொருவர் ஊக்கப்படுத்த வழி காணுதல் அவசியமாகும். சுற்றுசூழலுக்கு கேடுவிளைவிப்பதும், அழிவு தருகின்றதுமான செயல்கள், உலக வெப்பமயமாதல் போன்றவற்றை தடுக்க எழும் போரட்டங்களில் நம் ஈடுபாடு என்ன?

- படைப்போடு நல்லிணக்கம், எளிய சிக்கலற்ற வாழ்வு வாழ்வது எப்படி? என்பதெல்லாம் இன்றைய கேள்விகளாகும். இதற்கான போரட்டங்கள் நாடுகளின் தலைவர்களுக்கு மட்டும் உரியதல்ல, உற்பத்தியின் பெரும் பகுதியினை நுகர்வோர் மற்றும் போக்குவரத்தினை அதிகமாய் பயன்படுத்துவோரும் செய்ய வேண்டியதாகும்.
- இதை பற்றிய கேள்விகள் நம் உள்ளங்களில் உயிரோட்டம் பெறுமா? நாம் கிறிஸ்துவை பின்பற்ற ஆயத்தமா? அவர் உள்ளத்திலும், செயலிலும், எளிமையும், தாழ்மையுமுடையவராய் இருந்தார். அவருடையவர்களாக எப்போதும் எளியவர்களாய் இருக்கவும், தாராளமனப்பான்மை உடையோராயும் இருக்க முற்படுவோமாக.

### மூன்றாம் பிரேரணை:

### "சுவிஷேசத்தின் வல்லமையான செயல்பாட்டினை வெளிபடுத்த ஒன்றுக்கூடி வருதல்"

*ஆதி திருச்சபையார் அனுதினமும் ஒருமனப்பட்டவர்களாய் தேவலாயத்திலே தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள்.* ***அப் நட 2:46.***

*வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் ஒரே ஆவியானவரே அவற்றினை பகிர்ந்தளிக்கிறார். ஊழியங்களிலும் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் நாம் அனைவரும் ஒரே கடவுளுக்கே சேவை செய்வோம்.* ***1 கொரி 12:46***

*அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள். அதனாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு.* ***எபி 13:2***

பேதுரு கொர்நேலியு எனப்பட்ட எல்லாவிதங்களிலும் ஒருவருக்கொருவர் முற்றிலும் வேறுபாடான இருவரைப்பற்றி வேதம் கூறுகிறது. இருவரும் ஒருவரையொருவர் சந்தித்தன் மூலம் இதற்கு முன்பு அறிந்திராத புதிய உண்மையை கண்டு கொண்டனர். பரிசுத்த ஆவியானவர் எல்லா தடுப்பு சுவர்களையும் தரைமட்டமாக்கி, தாங்கள் அந்நியர்கள் என்று எண்ணிய இருவரை ஆச்சரியப்படுத்துகிறார் என்பதை உணர அவர்கள் ஒன்று கூடி வரவேண்டியதாயிற்று. சுவிஷேசத்தின் வல்லமை நாம் ஒன்றாக ஐக்கியப்படும் போது தான் வெளிப்படுகிறது. அப் நட 10, 11 வாசிக்கவும்.

கிறிஸ்தவர்கள் சபை பிரிவுகளாக பிளவுபடும் போதும், ஒரே சபைக்குள்ளே பிரிவினை வரும்போது சுவிஷேச செய்தியை பயனற்றதாக்கி விடுகிறது. நமக்குள்ளே இருக்கின்ற வேறுபாடுகள் நம்மை பிரிக்காதபடி நாம் இணைந்து செயல்பட முடியுமா? வேற்றுமையில் ஒற்றுமை என்பதை நாம் கிறிஸ்தவர்களாக காண்பிக்க முடியுமானால் அனைத்து மனித இனமும் ஓர் ஐக்கியமான குடும்பமாக வாழ உதவமுடியும்.

- பலதரப்பட்ட பின்னணியில் உள்ளவர்களையும் மொழி மற்றும் கலாச்சார வேறுபாடுகளுடன் வரலாற்றில் முன்பு ஒருவருக்கொருவர் எதிரான நாடுகளின் எல்லா ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும், முதியோர்களையும் கிறிஸ்து ஒரு சமுதாயமாக இணைக்கிறார். இதனை நாம் வாழும் இடங்களில் காண்பிக்க எளிய வழிமுறைகளை காண்போம்.

- உயிரோட்டத்துடன் இருக்க எல்லா சமுதாயங்களும், தங்கள் எல்லைகட்கு வெளியே செல்ல அழைக்கப்படுகின்றனர். கடவுளின் சாயல் உடையோராய் மற்றவர்களை ஆதரிக்கும் ஒரு கண்ணோட்டத்தை நம்மை விடமுற்றிலும் மாறுபட்ட நிலையில் உள்ள கிறிஸ்தவர்களிடையே உருவாக்க முடியுமா? இப்படிப்பட்ட திறந்த மனது உருவாக ஒரு மானமாற்றத்திற்கான முயற்சி வேண்டும். ஏனெனில் மாறுபட்ட நம்பிக்கைகளும், கொள்கை கோட்பாடுகளும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட மொழிகளை போன்றதாகும்.

- கிறிஸ்தவர்களிடையே, கடந்தகால வரலாற்றில் காணப்பட்ட சகிப்பு தன்மை இல்லாமை இன்றும் மாறக்கூடியதாக காணப்படா விட்டாலும் அனைத்து சிக்கல்களும் தீர்க்க முடியாததாக இருந்தாலும் நாமும் மன்னிக்கவும் யார் சரி யார் செய்தது தவறு என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்காத படி ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ள தைரியமாய் முன்வர முடியுமா? தியாகம் இல்லாமல் ஒப்புரவாகுதல் உண்டாகாது.

- மற்றவர்களின் மாறுபட்ட நிலையினை அங்கீகரிப்பது என்பது உபசரணை செய்வதில் ஓர் நிலையாகும். மற்றோரின் நம்பிக்கைகளை நாம் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும் போது அவற்றின் நம்பக தன்மையை குறைந்த பட்சமாக நாம் கவனித்து வாழ்தல் நல்லது. மற்றவர்களை புரிந்து கொள்ளுதலில் ஒரு சிறப்பு கண்ணோட்டம் நமக்கு இருத்தல் வேண்டும்.

**நான்காம் பிரேரணை:**

**“சமாதானத்திற்கான ஆயத்தமாக நட்புரிமைகள் வளர அனுமதியுங்கள்”**

*இயசே நம்மை சகோதர சகோதரிகள் என்று அழைக்க வெட்கபடவில்லை. எபி 2: 11-12.*

*ஒருவரே உங்களுக்கு போதகராய் இருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள். ஆகவே பூமியில் ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாய் இருக்கிறார் இயேசு.* ***மத் 23:89***

*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே எனக்கு சகோதரனும், சகோதரியும், தாயுமாயிருக்கிறான் இயேசு."* ***மத் 12:50***

*கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து தேவனுடைய ராஜ்யத்தில் பற்றியிருப்பார்கள்.* ***லுக்கா 13:29***

"சமாதானத்திற்கும், அனைத்துலக நீதிக்கும் பங்காற்றுவது இன்று நாம் திறக்க வேண்டிய

மற்றும் ஒரு நம்பிக்கையின் பாதையாகும். மண்ணுலகின் சமாதானம் ஒவ்வொரு தனிமனித உள்ளத்திலும் ஆரம்பிக்கிறது. முதன்முதலில் மாற்றம் பெற வேண்டியது நம்முடைய மனங்களாகும். இது கடவுளின் ஆவியானவர் நம்முள் தங்க அனுமதிப்பதும், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுவதும், தொடர்வு செய்யப்படுவதுமான அந்த சமாதானத்தை வரவேற்றுக் கொள்வதுமாகும். "உள்ளான சமாதானத்தை பெற்றக் கொள், உன்னை சூழ உள்ள ஆயிரங்கள் இரட்சிக்கப் படுவார்கள்" - *செராபீம் சவுரவ் - ரஷிய துறவி 1753 –1833.*

- நம்முடைய சொந்த வாழ்வினால் பிரிவினைகள், தடுப்புசுவர்களை கடந்து செல்கின்றதுதம், எளிய ஒன்றிணைப்பிற்கான புது பக்கங்களை எழுதுவோமாக. உலகின் பலபகுதிகளில் அமைந்துள்ள பலவிதமான தடுப்பு சுவர்கள், அறியாமையாகிய தடுப்புசுவர்கள், குறுகிய கண்ணோட்டங்கள், மற்றும் முரண்பாடுகளை களைய முற்படுவோம். மற்ற கலாச்சாரங்கள், மநிலைகளை தாரளாமாக ஏற்கும் மனதுடையவர்களாக மாற வேண்டும்.

- நம் உள்ளங்களில் வெளிநாட்டவர்களுக்கு இடமில்லை என்பதும் அவர்களை உள்ளத்தால் ஏற்க மறுப்பதும் காட்டு மிராண்டிதனததின் வித்தாகும். அந்நியரை நம்முடைய வாழ்வின் நிலைகளுக்கும் கலாச்சாரத்திற்கும் எதிரானவர்களாக காண்பதற்கு பதிலாக அவர்களை ஒரே மனிதகுலத்தின் அங்கங்களாக வரவேற்ககூடுமா? ஏன் அகதிகளை சந்திக்க நாம் போகக்கூடாது? அவர்களை பற்றி அறிந்து கொள்ளவும் அவர்களின் சோக கதைகளையும் ஏன் நாம் கேட்கக்கூடாது? அப்படி செய்யும் போது ஒரு வேளை அவர்களோடு இணைந்து செயல்படுவதற்கான வழிகள் ஏன் தோன்றாது? யாருக்கு தெரியும்?

- நம்மை விட மாறுபட்டவர்களை நாம் எப்படி அறிந்துணர்ந்து கொள்வது? மாறுபட்ட விதத்தில் சிந்திப்பவர்களோடு எப்படி நாம் சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது? மக்களை புரிந்து கொள்ளாமல் அவர்களோடு தர்க்கம் செய்வதை விட அவர்களோடு உரையாடல் செய்து அவர்களை புரிந்து கொள்வது நல்லது. பிரிவினைகள் காணப்படும் இடங்களில் தங்கியிருக்க வழிகளை நாம் கண்டு பிடிக்கவும் அங்கு இணைப்பு பாலங்களை கட்டவும் வழி என்ன? நம்மால் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்காவும், நம்மை புரிந்து கொள்ளாதவர்களுக்காகவும் நாம் ஜெபிப்போமாக.

- கூட்டொருமைக்கான அடையாளங்கள், மதங்களின் எல்லைகளுக்கப்பால் பெருக்கப்படவேண்டும். (அதிகரிக்கப்பட வேண்டும்) பிற சமய நம்பிக்கையாளர்களோடு தொடர்பு கொள்வது, நம்முடைய விசுவாசத்தை குறித்த அளவை ஆழப்படுத்தவும், உத்வேகப்படுத்தவும் உதவுகிறது. மேலும் கடவுள் நம்மைவிட வேறுபட்ட சகோதர, சகோதரிகள் வழியாக நமக்கு கூறவும், கொடுக்கவும் விரும்புவதென்ன என அறியவும் உதவுகிறது.

## “2017 - ல் திருச்சபையின் தலைவர்களுக்கான ஓர் அழைப்பு”

"பாதையில் இணைந்து செல்லுதல்"

2017-ல் சீர்திருத்த திருச்சபையின் 500-ஆம் ஆண்டு நிறைவு ஒருவருக்கு ஒருவர் ஓர் இணக்கமான சூழ்நிலையுடன், ஓர் ஐக்கியத்திற்கு நேரான ஓர் வாய்ப்பை தருகிறது எனலாம். அனைத்து சபைகளுக்குள்ளும், தனிசபை பிரிவுகளுக்குள்ளும் எப்போதும் வேறுபாடுகள் இருப்பது இயல்பாகும். இந்த வேறுபாடுகள் திறந்த உரையாடல்களுக்கான தலைப்புகளாக அமையும். இவை வளம் சேர்ப்பதாக அமையட்டும். எல்லா சபைகளிலும், காலத்தால் தங்கள் சபை பிரிவு சார்ந்த அடையாளம் தான் மேலோங்கி நிற்கிறது. மக்கள் தங்களுக்கு சீர்திருத்த சபையார் எனவும் கத்தோலிக்கர் எனவும் பழமைவாதிகளை வைதீசர் எனவும் விளக்கம் தருகின்றனர். திருமுழுக்கில் உண்டாகின்ற கிறிஸ்தவ அடையாளம் முக்கியத்துவம் பெற தக்க காலம் இன்னும் வரவில்லையா?

இதிலிருந்து அனைத்து சபைகளும் தங்கள் இறையியல் கேள்விகளுக்கெல்லாம் ஓர் விடை ஏற்பட காத்திராமல் தைரியமாக ஒரே கூரையின் அல்லது ஒரே கூடாரத்தின் கீழே வர வேண்டாமா! என்ற கேள்வி எழும்புகிறது. அதிக உறுதியான ஓர் ஐக்கியத்திற்கப்பால், தற்காலிகமானதாக இருந்தாலும் ஐக்கியத்தின் மகிழ்வும் கடவுளின் சபையில் காணபடக் கூடிய அடையாளங்களால், கிறிஸ்துவின் சரீரம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம் வெளிப்படதக்கதான செயல்களையும், வழிகளையும் உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

கிறிஸ்துவை நேசிக்கும் அனைவர் மத்தியிலும், ஐக்கியம் ஏற்பட வேண்டுமானால் அது மக்களின் பன்முக தன்மையை மதிக்க வேண்டும். இந்த ஒருமைபாடு நம்பதகுந்ததாக இருக்க வேண்டுமானால் அது காணப்படக் கூடியதாக இருந்தாக வேண்டும். இப்படிப்பட்ட ஓர் ஒப்புரவாக்கும் பன்முக நிலைக்கு நேராக செல்ல ஒரு துவக்க இடம் அவசியமாகிறது. அந்த துவங்குமிடம் கிறிஸ்துவே. ஏனெனில் அவர் பிரிந்திருக்கவில்லை. கிறிஸ்து வழியாக மட்டுமே நாமெல்லாரும், சகோதரர்களும் ஒருவருக்கொருவர் சகோதரிகளுமாகிறோம், கிறிஸ்து வழியாக நாம் ஒருவரோடொருவர் ஐக்கியமானவர்கள் என்பது உண்மையானதும், எக்காலத்திலும் பிரிக்க இயலாததுமாயிருக்கிறது (*டயட்ரிச் போன்ஹாப்ர்*)

இவ்விதமாக வரங்களை பகிர்ந்து கொள்வதை நாம் செய்யலாம். கடவுளின் அருட்கொடைகள் மற்றவர்களோடு நாம் பகிர்ந்து கொள்ளலாம். மேலும் மற்றவர்களிடம் கடவுள் அளித்துள்ள பொக்கிஷங்களையும் வரவேற்கலாம். இது மற்றவர்களை குறித்த தகவல்களை நன்றாக அறிந்து கொள்வது மட்டுமின்றி ஆவியானவர் அவர்களுக்கு

அளித்துள்ள வரங்களையும் நமக்கான வரங்களாக ஏற்றுக் கொள்ளுதலுமாகும். (*போப் பிரான்சிஸ்*)

நாம் எப்படி ஒரே கூரையின் கீழ் வர இயலும்? எப்படி நாம் ஒருங்கிணைந்து பயணிக்க முடியும்? சில பரிந்துரைகள்

- அடிமட்ட சமுதாயங்களாக, நமது அயலகத்தாரும், பல சபை பிரிவுகளான குடும்பங்களும், கடவுளின் வார்த்தைகளுக்கு செவி கொடுப்பவர்களாக இணைந்து ஜெபிப்பதும், அமைதி தியானத்திலும் துதிப்பதிலும், ஒருவருக்கொருவர் உதவுவதிலும் பிறரை அறிந்து கொள்வதின் வழியாகவும் இதனை செய்யலாம்.

- ஒவ்வொரு உள்ளூர் திருச்சபையும், சமூகமும் மற்ற பிரிவுகளை சார்ந்த கிறிஸ்தவர்களோடு நாம் ஒன்றுபட என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்ய வேண்டும். வேதபாட வகுப்புகள், சமூக, போதக சேவைகள் மற்றும் போதனைகளை மற்றவர்களை புண்படுத்தாதபடி இணைந்து செய்வது நல்லது. ஒரேவிதமான பணிகளை சமூகத்தில் செய்யும் இயக்கங்கள் ஒன்றிணைந்து செய்யலாம் அல்லது இணைந்து கொள்ளலாம்.

- நாம் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான செயல்களை கையாளுதல், மற்றவர்களின் வேதனைகளில் இணைந்து கவனம் செலுத்துதல், பிறரின் கண்ணிற்கு புலப்படாத துன்பங்களை கவனித்தல் குடிமாறி செல்வோரின் பிரச்சினைகளில் கவனம் செலுத்துதல், ஏழ்மை, போதிய வசதியின்மையாலும், பல விதமான வேதனைகளில் அவதிப்படுவோரையும் கவனத்தில் கொண்டு உதவுவதும், நமது சுற்றுப்புற சூழ்வியலை சீர் செய்ய கவனம் செலுத்துவதும் மேற்கூறிய அனைத்தையும் செய்ய முன்வர வேண்டும்.

- பலபட்டணங்களில் சபைகளுக்குள்ளே இவ்விதமான ஒரு நம்பிக்கை உருவாகியுள்ள நிலையில், தலைமை சபைகளும், கதீட்ரல்களும் கிறிஸ்தவர்களின் பொதுவான ஜெப வீடாக ஏன் மாற முடியாது?

- பொதுவான ஜெப ஐக்கியத்தை வளர்த்துக்கொண்டே, முன்னோக்கி செல்லும் வண்ணமாக இறையியல் உரையாடல்களுடன், நாம் ஏற்கனவே ஒன்றாக இருக்கிறோம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒருவருக்கொருவர் உள்ள நட்புறவிலும், செப ஐக்கியத்திலும் நாம் வளரும்போது இறையியல் கேள்விகளை வேறு விதமான வெளிச்சத்தில் பார்க்க தோன்றும்.

- அனைத்து கிறிஸ்தவர்களும் ஒருவிதமான போதக வரங்களை உடையவர்களாக,

ஒருவரையொருவர் பராமரிக்க கூடியவர்களாயிருந் தாலும், எல்லா மட்டங்களிலும் சபைக்கு ஐக்கியத்தின் ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். உலகளவில் ஊழியத்தின் ஐக்கியத்தின் அடையாளமாக பாரம்பரியமாக ரோமின் பேராயர் காணப்படுகிறார். இந்த ஊழியத்தோடு இணைந்து செயல்பட பல வழி முறைகளை உருவாக்கம் செய்ய சபைகளுக்கு முடியாதா? ரோமன் பேராயரை உலகெங்கிலும் உள்ள பல்வேறு பன்முகதன்மை உள்ள சகோதர சகோதரிகளுக்கு கடவுளின் ஊழியங்களை மேலாண்மை செய்கிறவராக அங்கீகரிக்க முடியுமா?

- விசுவாச ஐக்கியத்தையும், மற்றும் ஊழியத்தில், ஓர் இணைந்த செயல்பாடு இவற்றை வற்புறுத்தும் சபைகள் இறை உணவில் பங்கு பெறவும், சமத்துவ அன்பினை பேணுவதில் முக்கியத்துவம் ஏன் கொடுக்கக்கூடாது? நற்கருணை என்பது ஐக்கியத்தின் சங்கமம் மட்டுமல்ல அது ஒருமைப்பாட்டிற்கான பாதையில் நடத்தும் ஒன்று எனவும் நாம் அறியலாம்.

நமது கிறிஸ்தவ அடையாளம் இணைந்து பயணிப்பதிலேயே உள்ளதே தவிர தனியாக செல்வதில் அல்ல. நற்செய்தியின் உள்ளார்ந்த வலிமையும், சத்தியமும் வெளிப்படத்தக்கதாக நமக்கு ஒரே கூரையின் கீழ் வரத்தக்க தைரியம் உண்டா?

**ஐரோப்பாவின் - ஐக்கியத்திற்கு நேராக.**

‘‘குடியேறிகளின் வருகையிலும் - நாம் பயமின்றி முன் செல்லுவோம்’’.

ரிகாவில், தேசே சமூகத்தினா் டிசம்பா் 2016-ல் ஏற்பாடு செய்த கூட்டத்தில் ஐரோப்பாவில் பல நாடுகளிலிருந்து இளையோா் பலரும் ஒன்று கூடினா். [2]

ஐரோப்பிய ஐக்கியத்திலிருந்தும், மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் மக்கள் பங்கு பெற்றது அனைவரையும் ஒரு சமூகமாக உணர செய்த ஓா் நிலையை அனைத்து ஐரோப்பியா்களும் உணர செய்தது. நாா்டிக் கூடுகையும் மற்ற பகுதிகளிலிருந்து பங்கு பெற்ற இளைஞா்களை நாா்டிக் நாடுகளில் ஐரோப்பாவை காண உதவியது. இது இந்த கண்டத்தின் பன்முக தன்மையையும் ஒவ்வொரு பங்காளா்களும் தங்களின் சொந்த வரலாறு, பாரம்பரியம் மற்றும் சிறப்பு தன்மையையும் உணரத்தக்கபடி அமைந்தது.

ஐரோப்பாவின் சமாதானம் - தங்களின் விழிப்புணா்வை விசாலமாக்குவதிலும், கூட்டொருமையை தங்கள் நாடுகளில் வளா்ந்து கொள்வதிலுமே உள்ளது. ஒருவருக்கொருவா் உள்ள தொடா்புகளை பெருக்குவதுடன் பகிா்ந்து கொள்ளுவதிலும், இணைந்து செயலாற்றலும் மிக முக்கியமானவையாகும்.

ஐரோப்பாவின் ஐக்கியத்தை காட்டுவது என்பது, அதிகமான புரிந்துணா்வுடன் கூடிய உரையாடலிலும், ஒருவரை ஒருவா் செவிமடுப்பதாலும் மட்டுமே ஏற்படும். இதில் ஐரோப்பிய ஐக்கியமும் அல்லது ஐரோப்பிய ஒன்றியமும், மற்றுமுள்ளோரும், மேற்கு ஐரோப்பியரும் மத்திய மற்றும், கிழக்கு, வடக்கு, தெற்கு ஐரோப்பியரும் ஈடுபடவேண்டும். தனித்தன்மை வாய்ந்த ஒவ்வொரு சிறியதும் பெயதுமான நாடுகளின் குரல்களும் கவனிக்கப்பட வேண்டும். தங்களுக்குள்ளிருந்தே மற்றவா்களின் மன நிலையை புரிந்து கொள்ள முயற்சிப்பது முக்கியமானதாகும். அப்படியானால் மட்டுமே வெறுப்புணா்வுகள் நன்கு புரிந்து கொள்ளப்பட்டு உணா்ச்சி பெருக்கால் எழும் எதிா் வினைகள் தவிா்க்கப்படும். ஐரோப்பியா்களின் வேறுபாடுகளை விட அவா்களது பொதுவான பின்னணி (வோ்) ஆழமானது என்பதை கண்டுணர முடியுமா?

இரண்டாம் உலகபோாின் துவக்கத்தில் ஒப்புரவாக்குதலுக்கான ஓா் முயற்சி உருவாக்கப்பட்டது. அதன் பின்னா் பொ்லின் சுவாின் தகா்ப்பிற்கு பின்னால் ஐக்கியத்திற்கான ஒரு புது யுகம் உருவானது. இந்த சகோதர உணா்வில் சென்றால்தான்

---

2. டிசம்பா் 28-2016 - முதல் ஜனுவாி1 - 2017 வரை முழு ஐரோப்பாவிலிருந்தும் இளையோா் வந்திருந்தனா். கத்தோலிக்கா் மற்றும் வைதீசா் - மற்றும் சீா்திருத்த சபையினா் இந்த 39-ம் ஐரோப்பிய கூடுகையில் பங்கு பெற்றனா். இது டைசே சமூகத்தினரால், லாட்வியாவின் தலைநகா் - ரிகாவில் நடைபெற்றது. ஜனுவாி 2-ல் இந்த கூடுகை டல்லின் - எஸ்டோனியாவிலும் வில்னியஸ் - லித்துவேனியாவிலும் நீடிக்கப்பட்டது. பல வருடங்களாக தேசே தற்போது செய்துவரும் புனித பயண இயக்கத்தின் ஒரு முக்கியமான நிலையாகும்.

ஐரோப்பா முன்னேற முடியும் என்பதை பல இளைஞர்களும் உணருகின்றனர். இவர்கள் தங்களுக்குள்ளே ஒன்றுபட்ட ஓர் ஐரோப்பாவிற்காக விரும்புவது மட்டுமின்றி மற்ற கண்டங்களிலும் ஐக்கியத்திற்கான வழிதிறக்கவும், பல பிரச்சினைகளை சகிக்கின்ற மக்களோடு இணைந்த ஓர் சமுதாயத்தை காண விரும்புகின்றனர்.

உலகெங்கிலும், ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்கள் சொந்த நாடுகளை விட்டு செல்ல ஏவப்படுகின்றனர். அவர்கள் அனுபவிக்கும் துன்பமே இதற்கு காரணமாகிறது. அவர்களை தடை செய்ய நினைக்கும் அனைத்தையும் தாண்டிச்செல்ல இந்த துன்பங்களே காரணமாகின்றன. செல்வ செழிப்புள்ள இடங்களை பற்றிய ஏக்கம் அவர்களை அந்த இடங்களில் வைத்திருக்க இயலவில்லை. ஏனெனில் அவர்களின் சகிக்க முடியாத வேதனைகள் அவர்கள் சொந்த இல்லங்களை விட்டுவிட காரணமாகிறது.

சிலர் குடிபெயர்ந்து வரும் எல்லா மக்களையும் நாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்கின்றனர். மற்றும் சிலர் இந்த மக்களின் தற்கால குடிபெயர்தல்கள் தவிர்க்க முடியாதவை என எண்ணுகின்றனர். ஏனெனில் சகிக்க முடியாத சூழ்நிலைகளினால் இவை ஏற்பட்டவையாகும். இந்த குடிபெயர்தல்களை ஒழுங்குபடுத்த எடுக்கும் முயற்சிகள் நியாயமானதும். தேவையானதுமாகும். மனிதரை ஒடுக்குகின்ற - மனித வியாபாரிகளின் கைகளில் இந்த அகதிகளை விடுவதும், மத்திய தரை கடலில் சாக அனுமதிப்பதும் - மனித உயிர்களை அவமதிப்பதாகும். செல்வந்த நாடுகள் - வரலாற்றில் ஏற்பட்டுள்ள காயங்கள் மக்களின் குடிபெயர்தல், மற்றும் சுற்று சூழல் குழப்பங்கள் இவற்றில் தங்களுக்கு உள்ள பங்கின் தட்டிக் கழிக்க முடியாது.

இவை இன்றும் தொடர்ந்து ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், மத்திய அமெரிக்கா போன்ற பல பகுதிகளில் நடைபெற தாங்களும் காரணம் என்பதை மறுக்க முடியாது. பணக்கார நாடுகளின் அரசியல், பொருளாதார தெரிந்தெடுப்புகள், இன்றும் நிரந்தரமற்ற சூழ்நிலையினை மற்ற நாடுகளில் அதிகரிக்க செய்கிறது. மேற்கு சமுதாயம் அந்நியர்களைப்பற்றிய பயங்களை தவிர்த்து, கலாச்சார வேறுபாடுகளையும் கடந்து குடியேறிகள் காண்பித்துள்ள புதிய நிலைகளை பார்த்து தைரியமாக தங்களை சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். குடியேறிகளின் வரவு தங்கள் நாடுகளுக்கு உண்மையாகவே கஷ்டங்களை கொண்டுவருகிறது என்றாலும் அவர்களின் வரவு ஐரோப்பாவை புத்துணர்ச்சி பெறவும், திறந்த மனநிலை, ஐக்கியத்திற்கான வாய்ப்புகளை பெறவும் உதவுகிறது என எற்க வேண்டும்.

சில பகுதிகளில் அகதிகளின் வரவு மிகவும் அதிகமாகி அங்கு குடியிருப்போரின்

எண்ணிக்கையை விட அதிகமாகி பாரமான சூழ்நிலை ஏற்படுவதும் புரிந்து கொள்ளக்கூடியதே. ஐரோப்பாவின் நாடுகள் இந்த பிரச்சனைகளை இணைந்து எடுத்துச்செல்ல வழிகாணாததால் இது நாடுகள் தனித்தனியே சந்திக்கும் பாரமாக மாறியுள்ளது. சில இடங்களில் தனிப்பட்ட தொடர்புகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள மிக அழகாக உதவும் என்பதால் அகதிகளை தாராள மனதுடன் ஏற்றுக் கொள்கிறார்கள்.

தனிப்பட்ட தொடர்புகளுக்கு இணையானது ஏதுமில்லை. இஸ்லாமை பொறுத்தமட்டில் இது உண்மையாகும். இஸ்லாமியரும், கிறிஸ்தவர்களும் இணைந்து சமாதானத்திற்காக செயல்முறை காரியங்களில் ஈடுபடவும் கடவுளின் பெயரால் நியாயப்படுத்தப்படும் அனைத்து வன்முறைகளையும் புறந்தள்ளவும் வழி காணலாம். 800 வருடங்களுகக்கு முன்பு அசிசி தேசத்து புனித பிரான்சிஸ் - சமாதானத்திற்கான ஆர்வத்தால் எகிப்திற்கு பயணப்பட்டு சுல்தானை சந்திக்க தயங்கவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். புனித அன்னை தெரேசா மதவேறுபாடின்றி ஏழை எளியோர்க்கென தன் வாழ்வை அற்பணித்தனர். தங்களை தனிமைப்படுத்த விரும்பும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிர்காலம் இல்லை. ஐரோப்பியர்கள் தங்களுக்குள்ளும், அகதிகளோடு உள்ள தங்கள் தொடர்பிலும் நட்புறவும், ஒருவரையொருவர் ஆதரிப்பதும் சமாதான பாதைகளுக்கான ஆயத்தமாகும்.

Taizé Community
71250 Taizé
France
www.taize.fr